# சூடாமணியின் சிறுகதைகள் உணர்த்தும் குழந்தைகளின் உளவியல்

சு.சிவகாமி & முனைவர் ந. விஜயா
தமிழ்த்துறை, பாரதி மகளிர் கல்லூரி, சென்னை.108

47

**ஆய்வுச் சுருக்கம்**

சூடாமணியின் தனிமைத்தளிர் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள நோன்பின் பலன், அன்பு உள்ளம், தேவகி, என்னும் மூன்று சிறுகதைகள் ஆதாரங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சூடாமணி ஓர் உளவியல் எழுத்தாளர். அவரது படைப்புகளில் குழந்தைகளின் உளவியல் சார்ந்த செய்திகள் தனி இடத்தினைப் பெறுகின்றன. குழந்தைகள் பற்றிய படைப்புகளைப் படைக்கும் படைப்பாளர் குழந்தைகளின் மனநிலையை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அந்த வகையில் சூடாமணி குழந்தைகளின் உலக சூட்சமகங்களை நன்கு அறிந்தவராவர். குழந்தைகளின் மனநிலை சூழலுக்கு ஏற்றவாறு மாற்றமடையும் தன்மையினை உடையது என்ற கருத்துக்கள் மேற்கண்ட மூன்று கதைகளை ஆராய்வதன் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது.

**முன்னுரை**

சிறுகதைகள், புதினங்கள், குறும்புதினங்கள், நாடகங்கள், கவிதைகள் போன்ற படைப்புகளின் வாயிலாக இலக்கியங்கள் வளர்ச்சிப் பெறுகின்றன. படைப்பாளர் தங்கள் படைப்புகளின் வாயிலாக சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை வழங்குகின்றன. அந்த வகையில் படைப்புகளின் வாயிலாக மனிதனின் உளவியல் சார்ந்த செய்திகளையும் பிரதிபளிக்கின்றன. அவற்றுள் குழந்தைகள் சார்ந்த உளவியலும் முக்கியத்துவம் பெறுகின்றது. சூடாமணியின் நோன்பின்பலன் , அன்பு உள்ளம் , தேவகி என்ற கதைகளின் வாயிலாக குழந்தைகளின் உளவியல் செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரையின் நோக்கம் அமைகின்றது. அவற்றைப் பற்றி பின்வருமாறு காண்போம்.

**குழந்தைகளின் உளவியல்**

" உளவியல் என்பது மனிதனின் நடத்தையையும் , மனதில் ஏற்படும் நிகழ்வுகளையும் அறிவியல் முறைப்படி ஆராய்வதாகும்." [1]

"குழந்தைப் பிறந்த நாளிலிருந்து அவன் குமாரப் பருவம் அடையும் நாள்வரையில் அவனிடம் நடைபெறுகின்ற ஒவ்வொரு வகையான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் பல்வேறு முறைகளின் மூலம் ஒழுங்கு முறையாக அறிவதுதான் குழந்தை உளவியலின் நோக்கமாகும்," [2] என்பதற்கேற்ப சூடாமணி , தம் கதைகளில் இடம்பெறும் குழந்தைகளின் மனவளர்ச்சியினை பல்வேறு முறைகளில் சுட்டிகாட்டியுள்ளார்.

" குழந்தைகளைச் சுற்றிப் பின்னப்பட்ட கதைகளில் சூடாமணியின் பாத்திரங்கள் நிகழ்த்தும் உரையாடல்கள் கூட சுவாரசியமானவை." [3] என்கிறார் கே. பாரதி.

**நோன்பின் பலன்**

நோன்பின் பலன் சிறுகதையில், விளையாட்டில் மனம் லயித்திருக்கும் யமுனாவைப் பற்றி காண்போம். யமுனாவும் வேலைக்காரப் பையன் கந்தனும் சம வயதுடையவர்கள். ,இருவரும் பாண்டி விளையாடிக் கொண்டிருக்கும் போது யமுனாவின் அம்மா 'காரடை நோன்பிற்காக ' சரடு கட்டிக் கொள்ள அழைக்கிறாள். நான் பாண்டி ஆட வேண்டும் அம்மா.நான் எதற்காக சரடு கட்டிக் கொள்ள வேண்டும்

என்கிறாள். சரடு கட்டிக் கொண்டால் தான் வரப்போகும் கணவன் நன்றாக இருப்பான் என்று கூறி யமுனாவை கட்டாயப்படுத்தி இழுத்துச் செல்கிறாள் யமுனாவின் அம்மா. யமுனாவுக்கோ தடைபட்ட பாண்டி ஆட்டத்தைக் குறித்தே சிந்தனை இருந்தது. "ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடியிருந்தால் இத்தனைநாழிகைக்குள் கந்தன் அவுட்டாகி இருப்பானோ ?அப்படி முடித்திருந்தால் கந்தனுக்குத் தைரியம் சொல்லிட்டுத்தான் வந்திருப்பாள். பாவம்! கந்தன். தோற்றால் யாருக்குத்தான் அழுகை வராது ? அவளுக்குத் தெரியாதா என்ன ?" [4] என்ற யமுனாவின் சிந்தனை மூலம் , விளையாட்டில் ஈடுபடும் போது ஏற்படும் மனநிறைவு, அக்குழந்தையை மேன்மேலும் விளையாட்டில் ஈடுபடச் செய்தல். "[5]என்ற உளவியல் செய்தி வெளிப்படுகிறது. கந்தனுக்கு ஜீரத்தினால் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாக கந்தனின் தந்தை கூறுகிறார். யமுனா வருந்துகிறாள், பாவம் கந்தன். கசப்பு மருந்து கொடுப்பார்கள் , ஊசி போடுவார்கள் என்று எண்ணி கவலை கொள்கிறாள். கந்தன் சீக்கிரம் சரியாகி என்னுடன் விளையாட வர வேண்டும் என்று நினைக்கிறாள். கந்தனின் உடல்நிலை சீராக யமுனாவின் வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு வழியினைக் கூறுகிறார்கள் யமுனா பூஜை அறைக்குச் சென்று பெருமாளை வேண்டுகிறாள் பெருமாள்! நான் அன்று சரடு கட்டிக் கொண்டேன் அல்லவா, சரடு கட்டிக் கொண்டால் வரப்போகும் கணவன் நன்றாக இருக்க வேண்டும் அல்லவா , நான் கந்தனை கல்யாணம் செய்து கொள்கிறேன். நீ கந்தனை குணப்படுத்தி விடு என்று வேண்டுகிறாள். "இப்பொழுது கூட சரடு என் கழுத்தில் தான் இருக்கிறது. இதைக் கட்டிக் கொள்கிறவர்களுக்கு வரப்போகிற புருஷன் நன்றாக இருக்க வேண்டும் நீ இப்பொழுது கந்தனைக் காப்பாற்றித்தான் ஆக வேண்டும்."[5] குழந்தையிடம் ஒரு கருத்தினைக் கூறும் போது அவர்கள் அதனை நன்கு உள்வாங்கிக் கொண்டு அதன் படி நடக்கிறார்கள் என்ற உளவியல் செய்தி இச்சிறுகதையில் இடம்பெறும் யமுனாவின் மூலம் வெளிப்படுகிறது.மேலும ,"கடவுளின் இருப்பு பற்றிய எந்தப் பதிவையும் தராது, உன்னதமான மனிதப் பண்புகளே ஒருவனை மீமானுடனாக்கி உயர்த்தும் என்னும் கருத்துடையனவாய் விளங்குகின்றன. "[6] என்று சூடாமணியின் சிறுகதைகள் பற்றி ப. கல்பனா.கூறுகிறார்.அதற்கேற்ற வகையில் இசசிறுகதை அமைந்துள்ளது. "குமாரப் பருவத்தில் மிகக் குறுகிய காலத்தில் அபாரமான உடல்வளர்ச்சியும் , அதற்கு இணையான மனவளர்ச்சியும் ஏற்படுகிறது. அப்பொழுது மனநிலை நிலையாக இருப்பதில்லை. "[7] என்ற உளவியல் செய்தியும் , குழந்தை யமுனாவின் வாயிலாக இச்சிறுகதையில் வெளிப்படுகிறது.

**அன்பு உள்ளம்**

அன்பு உள்ளம் என்னும் சிறுகதையில் இரண்டாம் மனைவியான பாரதிக்கும், முதல் மனைவியின் மகனான ராமனுக்கும் இடையேயான பாசப்பினணப்பினைப் பற்றிக் காண்போம். ராமனுக்கு இரண்டு வயதாக இருக்கும் போது அவனது தாய் இறந்துவிடுகிறாள். ராமனின் தந்தை சதாசிவனோ மனைவி இறந்த பின் பாரதியை இரண்டாவதாக மணந்து கொள்கிறான். பாரதியும் ராமனைத் தான் பெற்ற மகன் போல் நன்கு பார்த்துக் கொள்கிறாள். ராமனும் பாரதி மீது உயிரையே வைத்திருக்கிறான். இப்போது பாரதி நிறைமாத கர்ப்பிணி. பிரசவத்திற்காக தாய் வீட்டிற்கு வருகிறாள். ராமனையும் உடன் அழைத்து வருகிறாள். பாரதியின் தாய் ஜானகி , ராமனை வெறுக்கிறாள். பாரதிக்கு வலிவந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறாள். அதனை அறியாத ராமன் ஜானகியிடம் , பாட்டி, அம்மா எங்கே என்று கேட்கிறான்.

"அவள் ஒன்றும் உன் அம்மா இல்லை உனக்கு அம்மாவே இல்லை! உன் அம்மா செத்துப் போய்விட்டாள்." என்று கூறி ராமனைக் காயப்படுத்துகிறாள். அவனால் அதனைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. "கல்லாய் சமைந்து நின்றான். அம்மா என் அம்மா தான் , நீ பொய் சொல்ற என்றான்."[8] பிரசவம் முடிந்து பாரதி வீட்டிற்கு வருகிறாள். அவளிடம் ராமன் வரத் தயங்குகிறான். அவளிடம்

நீ என் அம்மா இல்லையா ? நான் அம்மா இல்லாதவனா என்று கேட்கிறான். ”ராஜா ஸ்வாமி இருக்கிறாரல்லவா? அவர் ஒவ்வொருவர் மனதிலும் அவர்கள் அம்மாவைத் தெரிந்துக் கொள்ள வழி வைத்திருக்கிறார். அம்மாவைப் பார்த்ததும் குழந்தையின் மனதில் ’இவள் நம்மிடம் அன்பாயிருப்பாள் ’ என்று தோன்றும். துக்கம் வந்தால் அவளிடம் போய்ச் சொல்லி அழலாம் போல் தோன்றும் , சந்தோஷமாயிருந்தால் அவளோடு சேர்ந்து சிரிக்கலாம் போல தோன்றும். ”[9] ஆசையாய் அம்மா என்ற கூப்பிடத் தோன்றும் அப்படியெல்லாம் உனக்கு என்னைப் பார்த்தால் தோன்றுகிறதா ? என்று கேட்டாள். எனக்கும் அப்படித்தான் தோணுகிறது ஆனால் பாட்டி தான் இல்லை என்கிறாள் என்றான் ராமன். ராமனின் மனம் லேசானது. அவனது முகம் மலர்ந்தது. தொட்டிலில் உள்ள குழந்தையைக் காட்டி இவன் உன் தம்பி ராமன். இவனுக்கு என்ன பெயர் வைக்கலாம் ? என்று கேட்டுவிட்டு நீ ராமனல்லவா இவனுக்கு லட்சுமனன் என்று பெயர் வைக்கலாம் என்றாள் பாரதி.

மேற்கண்ட சிறுகதையின் மூலம் , பாரதி ராமனிடம் அவனுக்குப் புரியும் வகையில் எடுத்துக் கூறும் நிகழ்வு இக்கதைக்கே சிறப்பானது. பாரதியின் உரையாடலின் வழியாக , சூடாமணி குழந்தைகளின் உளப்பண்பினை நன்கு நோக்கியமை வெளிப்படுகிறது.

**தேவகி**

தேவகி என்னும் சிறுகதையில் கிரிஜா என்ற பெண்ணின் பிறந்து சில மாதங்களே ஆன குழந்தையின் செயல்களைப் பற்றி காண்போம்.கிரிஜாவின் கணவர் இறந்துவிட்டார். கைக்குழந்தையுடன் இருக்கும் அவளை உறவினர்களும் பாரமாக நினைத்துக் கைவிட்டனர். குழந்தையை எப்படியாவது வளர்க்க வேண்டும் என்ற சூழலில், வீட்டு வேலைக்கு ஆள் வேண்டும் தனிப் பெண்ணாக அந்த வேலையாள் இருக்க வேண்டும் என்ற விளம்பரத்தைப் பார்த்து அந்த வீட்டிற்கு வேலைக்குச் சென்றாள். அதனால் குழந்தையை காப்பகத்தில் விடும் சூழல் ஏற்பட்டது. அக்குழந்தையை விட்டுப் பிரிய முடியாமல் தவித்தாள். அக்குழந்தையும் தாயை விட்டுப் பிரிய மனமின்றி அழுது கொண்டே இருந்தது.அக்காப்பகத்தில் மாதத்தின் முதல் தேதியில் மட்டுமே வந்து குழந்தையைப் பார்க்க அனுமதி விதித்திருந்தனர். கிரிஜா குழந்தையைக் காப்பகத்தில் விட்ட ஐந்தாவது நாளே மாதம் பிறந்தது. குழந்தையை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போதெல்லாம் குழந்தை இவளை அடையாளம் கண்டு இவளிடம் ஒட்டிக் கொண்டது.அடுத்த இரண்டு மாதங்கள் இவளால் குழந்தையைப் பார்க்க முடியாமல் போனது. அடுத்த மாதம் குழந்தையைப் பார்ப்பதற்காக குழந்தைக்கு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக்கொண்டு காப்பகம் வந்தாள். எப்போது குழந்தையைப் பார்ப்போம் என்ற தவிப்புடன் காத்திருந்தாள். காப்பகத்தின் பணிப்பெண் குழந்தையைத் துக்கிக் கொண்டு வந்தாள். குழந்தையைக் காட்டினாள் இவளும் குழந்தையை வா கண்ணு என்று கையை நீட்டினாள். குழதையோ தலையைத் திருப்பிக் கொண்டது.

கிரிஜா குழந்தைத் தன்னிடம் வருவதற்கான முயற்ச்சிகள் பல செய்தும் வீணாகின. ”குழந்தை அப்பணிப்பெண்னைப் பார்த்துச் சிரித்தது. கிரிஜா அசைவிழந்து நின்றாள். சிறிது நேரம் உலகமே உறைந்து போயிற்று,”[10] என்ற சிறுகதையின் மூலம் , பழக்கமில்லாமல், தொடர்ந்து பயன்பாட்டில் இல்லாதபோது நினைவினை இழந்துவிடுவோம். ”குழந்தைப் பருவ நினைவுகள் எல்லாம் மழலை மொழியில் வெறும் பிம்பங்களாக மட்டும் இருப்பதால் அதனை நினைவு கூறுவது மிகக் கடினம். ”[11] என்ற உளவியல் செய்தி வெளிப்படுகிறது.

**முடிவுரை**

ஒவ்வொரு மனிதனும் குழந்தைப் பருவத்தை கடந்தே மனிதனாகிறான் .ஆனால் குழந்தைகளின் மனமானது பிரட்சினைகளுக்குள் சிக்கித் தவிப்பதில்லை சூழலுக்கு ஏற்றவாறு மாறுபடக்கூடியது என்ற

உளவியல் செய்தயினை மேற்கண்ட மூன்று கதைகளின் வழியாக இக்கட்டுரையில் அறிய முடியும்.

**அடிக்குறிப்புகள்**

1.பெ. வெங்கட்டம்மாள் , பொது உளவியல் , முதற்பதிப்பு 2011 தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம் , காமராசர் சாலை, சென்னை-600 005, ப.1

2.மேலது, ப.9

3.கே. பாரதி , இந்திய இலக்கியச் சிற்பிகள் ஆர். சூடாமணி. முதல் பதிப்பு 2017 சாகித்திய அகாதெமி , புது தில்லி-110 001. ப.78

4.ஆர். சூடாமணி. தனிமைத் தளிர் (தேர்ந்தெடுத்த சிறுகதைகள்) சீதாரவி கே. பாரதி(தொ.ஆ) , காலச்சுவடு பதிப்பகம், இரண்டாம் பதிப்பு : மே 2014. ப.16

5.மேலது, ப.20

6.ப. கல்பனா. காலத்தை வரையும் ஆளுமைகள் பரிசல் புத்தக நிலையம் , முதல் பதிப்பு : நவம்பர் 2021 ப.44

7. பெ. வெங்கட்டம்மாள் , பொது உளவியல் , முதற்பதிப்பு 2011 தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம் , காமராசர் சாலை, சென்னை-600 005, ப.7

8.ஆர். சூடாமணி. தனிமைத் தளிர் (தேர்ந்தெடுத்த சிறுகதைகள்) சீதாரவி கே. பாரதி(தொ.ஆ) , காலச்சுவடு பதிப்பகம், இரண்டாம் பதிப்பு : மே 2014. ப.26

9.மேலது, ப.28,29

10.மேலது, ப.433

11.பெ. வெங்கட்டம்மாள் , பொது உளவியல் , முதற்பதிப்பு 2011 தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம் , காமராசர் சாலை, சென்னை-600 005, ப.118 ளள